கிறேன். ஓராண்டு அல்ல. 3 மாதத்திற்குள்ளாகவே நீங்கள் தேர்தல் நடத்துங்கள். தேர்தல் நடத்த வேண்டுமென்ற எண்ணம் இருந்தால் 3 மாதத்தில் நடத்துங்கள். இல்லையென்றால் 5 ஆண்டு காலம் நீதி மன்றத்திலே ஆகலாம். 5 ஆண்டுகள் அல்ல 10 ஆண்டுகள்கூட ஆகும். உச்ச நீதி மன்றம் செல்ல வேண்டிய நிலைமைகூட ஏற்படும். ஆகவே 10 ஆண்டு காலம் அரசின் பொறுப்பில் எடுத்துக் கொள்கிறோம் என்றே சொல்லி விடலாம். அரசாங்கமே நிரந்தரமாக எடுத்துக் கொள்ளும் என்று சொல்ல வேண்டும். அதை விட்டு விட்டு ஓராண்டு, ஓராண்டு என்று ஒவ்வொரு ஆண்டும் கொண்டு வருவதை விட, இதை நீங்கள் நல்ல முறையிலே பொதுமக்களுக்குத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் சொல்வது போல் இந்த அறக்கட்டளையிலிருந்து செங்கல்வராயன் பாலிடெக்னிக் போன்றவைகளை, கோவிந்த நாய்க்கன் அறக்கட்டளையை நீக்குகின்ற அளவுக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அறக்கட்டளை செம்மையாக முறையாக நடக்கக்கூடிய அளவுக்கு மக்கள் பிரதிநிதிகளை நீங்கள் அங்கே அங்கத்தினர்களாக சேர்க்க வேண்டும். இல்லை என்றால் தேர்தலை வைத்துவிடுங்கள். அதாவது நல்ல முடிவு சொல்ல வேண்டும். ஓராண்டு, ஓராண்டு என்று நீடிப்பு கூடாது என்று தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

12-30 மணி

திரு. ரெ. பிச்சைமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் அறக்கட்டளை குறித்த சட்ட முன்வடிவு குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த பச்சையப்பன் அறக்கட்டளை என்பது பொது மக்களுக்காக, அதாவது பின்தங்கிய மக்கள், அந்த சமுதாய மக்கள் பயன் பெற, அதிலே வேலை வாய்ப்பு, படிப்பு சம்பந்தப்பட்ட துறையில் பயன் பெற வேண்டி அந்தக் கட்டளை நிறுவப்பட்டது. ஆனால் அந்த அறக் கட்டளையில் நடப்பது என்ன வென்றால் அது வியாபார ஸ்தலமாக, அதாவது குறிப்பாகக் கூற வேண்டுமென்றால், அது தனிப்பட்ட நபர் என்பதை விட ஒரு கூட்டு அமைப்பின் சார்பிலே அவர்கள் தவறான வழியிலே அதை அங்கே இயக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் அதிலே இருக்கின்ற அங்கத்தினர்கள் அதை முறையாகப் பயன்படுத்துவதில்லை; அரசியலிலே இருக்கக்கூடிய ஓட்டை உடைசலைப் பயன்படுத்தி, நீதி மன்றத்திலே வழக்கு மூலமாக அதிலிருந்து அவர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள். ஆகவே என்னுடைய கட்சியின் சார்பில் வலியுறுத்திக்

கூறுவது என்னவென்றால் இதை அரசே ஏற்று நடத்துவது சாலச் சிறந்தது என்று கூறி, எனக்கு வாய்ப்பு நல்கியதற்கு நன்றி கூறி, அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும், வெவ்வேறான கண்ணோட்டத்தில் வெவ்வேறான கருத்துக்கள் பிறக்கின்றன. அந்த வகையில் 1981 ஆம் ஆண்டில் இந்த அறக் கட்டளையை அரசு மேற்கொண்டபோது, அறக்கட்டளை பல தவறுகளைச் செய்ததாகச் சொல்லப்பட்ட கருத்து இன்னொரு சாராரால் மறுக்கப்பட முடியும். மறுக்க முடியாது என்பதல்ல. ஆயினும் அப்படி ஒரு கருத்து ஏற்பட்டு அரசு மேற்கொண்டது. அடுத்து, அந்த அறக் கட்டளை நிர்வாகத்தை நடத்துகிற முறையில் பச்சையப்பன் அறக்கட்டளை என்றும், செங்கல்வ ராயன் அறக்கட்டளை என்றும் பிரித்து நடத்த வேண்டுமென்ற ஒரு கருத்து நீதிமன்றத்தின் ஆலோசனையாகப் பெறப்பட் டாலும்கூட நடைமுறையில் இரண்டு அறக்கட்டளையாக நடத்து வதில் உள்ள சிரமங்கள் காரணமாக ஒரு தயக்கம் இருக்கிறது. அதை மீறி பிரித்து நடத்த வேண்டுமானால், மேலும் பரிசீலிக்க வேண்டிய ஒரு கால கட்டத்தில் அறக்கட்டளை அமைப்பையே மாற்றுவது என்று இன்னொரு வகையான கருத்து இருந்தாலும், ஏற்கெனவே உள்ள முறைகள் ஏற்புடையதாக இல்லாத காரண மாக இன்னின்ன வகையான பிரதிநிதித்துவம் உள்ளதாக தேர்வு நடைபெற வேண்டும் என்ற அடிப்படையில் உயர் நீதிமன்றத்தில் அதற்கான ஒரு வேண்டுகோள் தரப்பட்டு இருக்கிறது. அது இந்த வழக்குத் தொடர்புடைய கருத்தாக இருக்கிற காரணத் தினால் இதில் முடிவு பெறப்படாமல் இருக்கிறது.

இந்த அரசு ஓராண்டுக்குப் பதிலாக 5 ஆண்டு அல்லது 10 ஆண்டு நீடிக்கக் கேட்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் சொன்ன கருத்து ஒன்று முடிந்தால் இப்படிச் செய்யுங்கள், முடியாவிட்டால் அப்படிச் செய்யுங்கள் என்று சொல்கிற ஓர் அவசரமான போக்காகும். இந்த அரசு தொடர்ந்து அறக் கட்டளையை அரசாங்க அதிகாரிகளைக் கொண்டே நடத்த வேண்டுமென்று விரும்பவில்லை. விரும்ப வில்லையென்றாலும்கூட, ஒரு புதிய அறக்கட்டளை அமைப்பை எப்படி அமைப்பது, மேலாண்மைக் குழுவை எப்படித் தேர்வு செய்வது, யார் யாரைக் கொண்டு தேர்வு செய்வது என்பதைத் தீர்மானிக்க முடியாத, தீர்மானித்து ஒரு முடிவுக்கு வர முடியாத இக்கட்டான சூழ்நிலை அரசுக்கு இருக்கிறது. செங்கல்வராய நாயக்கர் இன்ஸ்டிட்யூட்டைப் பொறுத்த வரையில் அந்த அறக் கட்டளையினுடைய, தனி உரிமைகள் பாதிக்கப்படாத வகையில் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யவும் கருதப் படுகிறது. இவைகளை எல்லாம் சேர்த்து இணைத்து ஒரு முக மான ஒரு முடிவுக்கு வர முடியாத இக்கட்டான நிலை நீடிக்கிற காரணத்தினால்தான் தற்காலிகமாக இதன் மூலம் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டித்தால், இடையில் ஒரு முடிவை நீதிமன்றத்திட